**SC NO.51/2012** **Date:13.03.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. செல்வராஜ் என்ற Pw11 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. செல்வராஜ்**

**த/பெ, - திரு. தாமோதரன்**

**வயது - 64/2025**

**தொழில் - சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்டம், ஓரிக்கை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தமிழக காவல் துறையில் பணியாற்றி வந்து சுங்குவார்சத்திரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். சம்பவ காலத்தில் விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வந்த போது கடந்த 07.07.2011 அன்று காவல் நிலைய குற்ற எண்.405/2011ல் சம்பவ இடத்திலிருந்து காவல் ஆய்வாளர் கைபற்றிய இர்தக்கரை படிந்த மண் மற்றும் இரத்தக்கரை படியாத மண் மற்றும் 3 கத்திகள் ஆகியவற்றை என்னிடம் ஒப்படைத்து காவல் ஆய்வாளர் கொடுத்த விண்ணபத்தை பெற்று சென்னை தடவியல் அறிவியல் கூடத்தில் ஒப்படைத்தேன். 22.07.2011 அன்று தடய அறிவியல் கூடத்திலிருந்து ஆய்வறிக்கையை பெற்று கணம் நீதித்துறை நடுவர் காஞ்சிபுரம் அவர்களிடம் ஒப்படைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை இல்லை, மறு விசாரணை இல்லை.**